Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

விலை 9
போன் 389

National Tamil Daily

இதழ் 99
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க வைகாசி 7 ஸபர் 10 ஞாயிற்றுக்கிழமை [21-5-67]

பாவனைக்குச் சீறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்

டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

ஜூன் 20-ல் பார்லிமெண்ட் கூட்டத்தொடர் கூலக்கப்படும்

23-ல் புதிய தொடர் ஆரம்பம்
25-ல் வரவு-செலவுத் திட்டம்

கொழும்பு, ஞாயிறு

இலங்கை—இந்திய ஒப்பந்த அமுல் மசோதா ஜூன் மாதம் 2-ந் திகதிக்கு முன்னர் பார்லிமெண்டில் மூன்றாவது தடவையாகவும் நிறைவேற்றப்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மசோதாவை பார்லிமெண்டின் இரு சபைகளிலும நிறைவேற்றிக் கொண்டு பார்லிமெண்டின் இப்போதைய கூட்டத்தொடரைக் கலைப்பதென அரசாங்கம தீர்மானித்திருக்கிறது.

பார்லிமெண்டின் இப்போதைய கூட்டத் தொடர் அடுத்த மாதம் 20-ந் திகதி கலைக்கப்படுமென்றும் புதிய கூட்டத்தொடர் 23-ந் திகதி ஆரம்பமாகும் என்றும் சபை முதல்வர் திரு. சி. பி. டி. சில்வா நேற்றுக் கட்சித் தலைவர்களிடம் தெரிவித்தார்.

ஜூன் மாதம் 23-ந் திகதி பார்லிமெண்டின் புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து கவர்னர் ஜெனரல் சிம்மாசனப்பிரசங்கம் நிகழ்த்துவார். அன்று பிற்பகலே புதிய வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டை ஜனப்பிரதிநிதிகள் சபையில் நிதி அமைச்சர் சமர்ப்பிப்பார். 25-ந் திகதி புதிய வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் சமர்ப்பித்து தமது வரவு - செலவுத் திட்ட உரையை நிகழ்த்துவார். புதிய வரிவிதிப்பு யோசனைகளையும் வெளியிடுவார்.

யாழ்ப்பாணம் வருவர்
கைத்தொழில் பொருட்காட்சி ஜூலையில் ஆரம்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் கைத்தொழில் விவசாயப் பொருட்காட்சிக்கான பூரண ஒழுங்குகளும் வெகுதுரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பொருட்காட்சி ஜூலை மாதம் 27-ம் திகதி முதல் 31-ம் திகதிவரை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக்கைத்தொழில் பொருட்காட்சியைத் திறந்து வைக்கும் பொருட்டு அன்றுகாலை பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காயாழ்ப்பாணம் வருவார். அவருடன் கைத்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனவும், உள்நாட்டு அமைச்சர் டாக்டர் தகநாயக்காவும் வரவிருக்கின்றார்கள். இப்பொருட்காட்சிக் குழுத்தலைவராக அரசாங்க அதிபர்

[6-ம் பக்கம் பார்க்க]

''சிகிச்சைக்கு செல்கிறேன் பயந்து ஓடவில்லை''
திருமதி சிறிமா அறிக்கை

கொழும்பு, சனி

பிரச்னையைக் கண்டு ஒரு போதும் ஓடமாட்டேன். எத்தனையோ பிரச்னைகள் சூழ்ந்தபோதும் அவற்றை சமாளித்துக்கொண்டு தான் பிரதமராகக் கடமையாற்றினேன். மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க நானும் எதிர்க்கட்சியினரும் தொடர்ந்து போராடுவோம் என்பதை உறுதியாக நம்பலாம். நான் யூகோஸ்லேவியாவுக்குச் செல்வது எனது நோய்க்குச் சிகிச்சை செய்வதற்காகவே அன்றி நான் பயந்து ஓடவில்லை'' என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சித் தலைவருமான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

''நான் பயந்து ஓடுவதாக பிரதமர் கூறியிருந்தார். என்னதான் அரசியல் வேறுபாடு இருந்தாலும் மனிதத் தன்மையுடன் மனித உணர்ச்சிகளை நாம் மதித்து நடந்திருக்கிறோம். பிரதமர் பெருந்தன்மையற்ற முறையில் இப்படி என்மீது தாக்குதல் நடத்துவாரென நான் எதிர்பார்க்கவில்லை. பண்பற்ற முறையில் அவர் இப்படிச் சொல்லுவாரெனவும் நான் எதிர்பார்க்கவில்லை'' என்றும் திருமதி பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

இரு புதிய 'கியு. ஸி'க்கள்

கொழும்பு, சனி

பிரபல வழக்கறிஞர் திரு. எஸ். ஜே. கதிர்காமரும் தற்போதைய சொலிசிட்டர் ஜெனரல் திரு. வால்ட்டர் ஜயவர்த்தனவும் புதிய கியு. ஸி.க்களாக பட்டம் வழங்கப்பட்டுள்ளனர். திரு கதிர்காமர் கொழும்பு பிரபல வழக்கறிஞர் திரு. எஸ். ஜே. வி. கதிர்காமரின் மகனும் இலங்கை கடற்படைத் தளபதி திரு ராஜன் கதிர்காமரின் சகோதரருமாவர்.

மீண்டும் மோட்டார்கார் ஊர்வலம்

கொழும்பு, சனி

மாவட்டசபை மசோதாவுக்கும் இலங்கை—இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக திரு. சோமவீர சந்திரசிறியின் தலைமையிலுள்ள சிங்கள பாஷா பெரமுனை ஜூலை மாதம் 14-ந் திகதி கொழும்பிலிருந்து கண்டி வரைக்கும் அனுராதபுரத்துக்கும் மோட்டார் கார் ஊர்வலம் செல்லத்திட்டமிட்டுள்ளது. முன்னெரு தடவை இதுபோன்ற ஊர்வலம் தடைசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மந்திரி தகநாயகாமீது நம்பிக்கையில்லா பிரேரணை
எதிர்க்கட்சியினர் கொண்டுவருகின்றனர்

கொழும்பு, சனி

உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ. தகநாயக்கா மீது நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டு வருவதென எதிர்க்கட்சியினர் இன்று முடிவுசெய்தனர்.

கிராமசேவகர்களுக்குப் பதிலாக முன்னைய கிராமவிதானைகளை நியமித்ததாகவும், காரியாதிகாரிகள் மற்றும் அரசாங்க ஊழியர் சிலரை அனுவசியமாக இடமாற்றம் செய்து யு. என். பிக்குத் தேர்தலில் ஆதரவு திரட்டுவதற்குத் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தியதாகவும் எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ராஜினமா செய்ய முடிவு

சர்வதேச பார்லிமெண்டரி யூனியனின் இலங்கைக் கிளையிலிருந்து ராஜினமாச் செய்வதென்றும் எதிர்க்கட்சியினர் தீர்மானித்தனர்.

இந்த யூனியனின் கிளை உப தலைவர் பதவிகளில் ஒன்றுக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவரைத் தெரிவு செய்வதற்கு முடியாமல் போனதைத் தொடர்ந்து அதில் அங்கம் வகிப்பதில் அர்த்தமில்லையெனக்கூறி அதிலிருந்து ராஜினமாச் செய்வதென அவர்கள் முடிவுசெய்தனர்.

சர்வதேச பார்லிமெண்டரி யூனியன் இலங்கைக் கிளையின் உபதலைவர்களாக நீதிஅமைச்சர் திரு. பி. பி. விஜயமானேயும் உதவி உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

டாக்டர் என். எம். மால்டா பயணமானார்

கொழும்பு, சனி

மால்டாவில் நடைபெறும் பார்லிமெண்டரிக் குழுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக டாக்டர் என். எம். பெரேரா மால்டாவுக்கு இன்று பிரயாணமானார். இக்குழுவில் இவர் அங்கத்தவரலலாத போதிலும் பார்லிமெண்ட் விவகாரங்களில் அனுபவமுடையவராதலால் டாக்டர் பெரேரா விசேஷமாக அழைக்கப்பட்டுள்ளார். மால்டாவிலிருந்து லண்டன் சென்று அதன் பின்னர் ஜூன் மாதக் கூட்டசியில் அவர் இங்கு திரும்புவார்.

நீதிமன்றத்தில் அட்வகேட் தமிழ் கவிதை பாடினர்!

யாழ்ப்பாணம், சனி

அட்வகேட் இரகுபதி நீதிமன்றத்தில் தமிழில்இராகத்துடன் கவிதை பாடினர். மூளாய் கொலைவழக்கில் தொகுப்புரை நிகழ்த்தும் போதே அவர் கவிதைபாடினர்.

ஜூரிசபையினர் முன்னிலையில் நின்று தொகுப்புரை நிகழ்த்திக்கொண்டிருந்த பொழுது ஒரு கட்டத்தில் கீழ்க்கண்டகவிதையைஅவர் பாடினர்.

'மதிமிகுந்த பிராமணத்தி
மகனே நோக்கி முலை
கொடாள்,
அருகிருந்த குயவனார்
ஆணைசெய்து காட்டினார்,
பிராமணன் துரும்பு
கொள்ளான்
தண்டுகொண்டு ஓடினான்,
அருகிலிருந்த சமணனார்
ஆடுஎடுத்தல்திண்மையே'

இப்பாடலுக்கு அட்வகேட் இரகுபதி ஆங்கிலத்தில் கருத்து தெரிவிக்கை

[6-ம் பக்கம் பார்க்க]

கைத்தொழில் பேட்டைகள்

கொழும்பு, சனி

காலியிலும், யாழ்ப்பாணத்திலும் கைத்தொழில் பேட்டைகள் நிறுவுவதற்கான பொருத்தமான இடங்களைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஆராய்ந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நாட்டின் சுதந்திரத்தைக்காக்கும்பொறுப்பு அனைவருடையதுமாகும். சுதந்திரத்தைக் காக்க நாம் நமது பணிகளை 'அறம்' என்னும் அடிப்படையிலமைக்க வேண்டும்.

—வினோபாஜி

ஈழநாடு

Eelanadu Natioal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க ஞு
வைகாசி 7மீ ௳ (21-5-67)

விற்பனவுஇலாகா விற்பனைநிலையம்

இலங்கை விற்பனவு இலாகாவின் [மார்க்கெட்டிங் டிபார்ட்மெண்ட்] விற்பனை நிலையமொன்று யாழ்ப்பாணம் பெரிய கடையில்இன்று பிற்பகல் திறந்துவைக்கப்படவிருக்கிறது. பலவருடங்களாக எடுக்கப்பட்ட இந்த முயற்சி இன்று பூர்த்தியாகிறது. இது யாழ்ப்பாண நகரமக்களுக்கு மட்டுமல்லாது யாழ்ப்பாணக்குடாநாட்டில் வாழும் மக்களுக்கும் பெரும் உதவியும் ஆறுதலுமளிப்பதாகும்.

காய் கறி மற்றும் உணவுப் பொருள்கள் தட்டுப்பாடில்லாமலும் நியாயமான விலையிலும் பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் விற்பனவு இலாகா ஆரம்பிக்கப்பட்டது. நாட்டின்பல பாகங்களிலும் இந்த இலாகாக் கிளைகள் திறக்கப்பட்டு அவை அப்பகுதி மக்களுக்குப் பெருமளவில்உதவியாகவுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்திலும் இந்த இலாகாவின் கிளையொன்று பலவருடங்களுக்கு முன்னரே திறக்கப்பட்டபோதிலும் அந்த விற்பனை நிலையம் நகரின் ஓர் ஒதுக்குப்புறமான இடத்திலேயே இருந்து வந்தது. யாழ்ப்பாணம் பெரியகடைப் பகுதியில் தான்காய்கறி, மீன்சந்தை முதலியனவும் இதரவர்த்தகஸ்தாபனங்களும் முக்கியமாக இடம்பெற்றிருக்கின்றன. பெரியகடையில்தான் பஸ்நிலையமும் இருக்கிறது. வெளியூர்களிலிருந்து வருவோரும் வெளியூர்களுக்குச் செல்லுவோரும் மற்றும் நகரில் வாழும் பெரும்பான்மையான மக்களும் நகரின் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் விற்பனவு இலாகா விற்பனை நிலையத்தைத்தேடிச் செல்வது சுலபமல்ல. இதனால்தனிப்பட்ட வியாபாரிகளுக்கு லாபமும் பொதுமக்களுக்குநஷ்டமும் ஏற்பட்டு வந்தது. வாழ்க்கைச் செலவு குறைவதற்கான வாய்ப்பு இருக்கவில்லை.

விற்பனவு இலாகா விற்பனை நிலையத்தை யாழ்ப்பாணம் பெரியகடைப் பகுதியில் ஓர் இடத்தில் இறக்க வேண்டுமென்று பொதுமக்கள் பலரும் கோரிவந்தனர். நாமும் இதே பத்தியில் இக்கோரிக்கையை இதற்குமுன் பல தடவைகளிலும் வற்புறுத்தி வந்திருக்கிறோம். யாழ்ப்பாணம்மாநகரசபையும் இதுவிஷயத்தில் அக்கறை செலுத்த வேண்டுமெனக்கோரி வந்திருக்கிறோம்.

பொதுமக்களின்கோரிக்கையும் நமது முயற்சியும் இன்று நிறைவேறுகிறது.

விற்பனவு இலாகா விற்பனவு நிலையத்தை யாழ்ப்பாணம் பெரியகடைப் பகுதியில் மின்சாரநிலைய வீதியிலுள்ள ஒரு கட்டிடத்தில் திறப்பதற்குமுன் வந்தவர்களைப் பாராட்டுகிறோம். காய்கறி மட்டுமல்லாது மற்றும் தட்டுப்பாடாகவுள்ள இதர உணவுப்பொருள்களும் பொதுமக்களுக்கு தட்டுப்பாடில்லாமல், நியாயமானவிலையில் கிடைப்பதற்கு விற்பனவு இலாகா ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். விற்பனை இலாகாவும் ஓர் அரசாங்க இலாகா என்பது உண்மையே. ஆயினும் பொதுமக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற வேண்டியபெரும்பொறுப்புள்ள இந்த இலாகாவின் விற்பனை நிலையம் 'காலை 8மணி தொடக்கம் மாலை 5மணி வரை' என்ற விதிமுறையைத் தளர்த்தி மாலையில் அரசாங்க ஊழியரும் வேலைத்தலத்திலிருந்து திரும்புவோரும் பண்டங்கள் வாங்குவதற்குவசதியாகமாலை6மணி வரை திறந்திருக்கக்கூடியதாக நண்பகல் இடைவேளையைசிறிது நீடிப்பது மக்களுக்குப் பயனளிக்கும். விற்பனவு இலாகா அதிகாரிகள் இதுபற்றிக் கவனம் செலுத்துவார்கள் என எதிர்பார்ப்போம்.

நாளை வற்றுப்பளை அம்மன் பொங்கல்

ஆண்டுக்கு ஒரு முறை வரும் அம்மன் பொங்கல்

களிப்பும் பக்தியும் கலையும் கொண்ட உற்சவம்

— மக்கள் கவிமணி மு. இராமலிங்கம் —

இலங்கையில் கண்ணகி மாதெய்வத்திற்குக் கோயில் எழுப்பிய இடங்கள் பல உள. ஆயினும் மற்றத் தெய்வங்களோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால், கண்ணகிக்கும் திரௌபதைக்கும் கோயில்கண்ட இடங்கள் மிகச் சிலவே.

மேலும் வழிபாட்டை நோக்குங்காலும் ஆண்டுக்கு ஒரே ஒருமுறைதான் இத்தெய்வங்களுக்கு உற்சவம் நடக்கும். ஊரார் அனைவரும் அதில் பங்கெடுப்பர். அந்த உற்சவத்தில் பொங்கல் பெருஞ் சிறப்புடையது ஆகும். சிறுவருக்குக் களிப்பும், நடுத்தரத்தினருக்குப் பெரும் பக்தியும், முதியோருக்குக் கலையும் நம் கண்காண நிகழ்வனவாம். திரௌபதியம்மன் கோயில்களில் தீக்குளித்தல் விசேடமாம் —இவற்றுக்கு அயல் ஊர்களிலிருந்தும், தூரத்திலிருந்தும் மக்கள் திரள்திரளாகச் செல்வர் என்றும் அறிக.

கண்ணகிக்குப் பத்தினித் தெய்வம் என்பது பெருவழக்காகவும், சரித்திர வாயிலாகவும்வரும் பெயர். சேரகுலத் திலகமும், முடியுடை மன்னனும் ஆகிய செங்குட்டுவன், தென் இந்தியாவில் கண்ணகிக்குக் கோவில்கண்ட முகூர்த்தத்தில், இலங்கையின் முடியுடை வேந்தனாகிய கயவாகு மன்னனும் [இரண்டாம் நூற்றாண்டு] உடன் இருந்தான் என்பது சரித்திரம். கயவாகுவே கண்ணகி வழிபாட்டை இலங்கைக்குக் கொண்டுவந்தான் என்பர்.

இவற்றிலிருந்து கண்ணகி வழிபாடு தொன்மையுடையது என்று தெரிக. இனி, கண்ணகியம்மன் கோவில் வரலாறுகள் அனைத்தும் புராணக் கதைகள் போல் இருக்கும். இக்கட்டுரையைக் கண்ணுறும் கலையுள்ளம் ததும்பும் தமிழர் எவரும் தமக்குத் தெரியவந்த தலமகிமையை எமக்கும் தெரியத் தரின், அதனை நம் நாட்டுக் கலைச்செல்வம் ஆக்கிக்கொள்வோம். இங்கு வற்றுப்பளையம்மன் வரலாற்றை விரித்துத் தருவதோடு, உதாரணத்திற்கு வேறொரு தலக்கதையையும் சுருக்கித் தருவோம்.

கீழ்வரும் பாட்டினால் கண்ணகியம்மனுக்குக் கோயில்கண்ட தலங்களின் பெயர்கள் வெளியாகின்றன. அங்கணாமைக்கடவை செட்டிபுலம், அச்சூழ், வற்றுப்பளை, கொம்படி, பொறிக்கடவை, சங்குவயல் கோலங்கிராய் என எட்டுப் பெயர்கள் தெரியவருகின்றன.

அங்கணாமைக் கடவை செட்டிபுல மச்சூழ்
ஆனதொரு வற்றுப்பளை மீதுறைந்தாய்;
பொங்கு புகழ் கொம்படி பொறிக்கடவை சங்குவயல்
புகழ் பெருகு கோலங்கிராய் மீதுறைந்தாய்;
எங்குமே யுன்புகழை மங்காம லோத
என்றனது சிந்தையிலுறைந்த காரணியே
பங்கமுறு துயரங்கள் தீர வருள் புரிவாய்
பரிவு செறி கோலங்கிரா யிலுறை மாதே.

இதனைப் பாடியவர் இன்னார் என்று தெரியவில்லை. ஆயினும் ஈற்றடியினால் கோலங்கிராய் என்னும் ஊரில் எழுந்தருளியிருக்கும் கண்ணகியம்மன்மீது பாடப்பட்ட தலமான்மியம், தலபுராணம் என்னும் இருவகைப் பிரபந்தங்களுள் ஒன்றனது பகுதியாக இப்பாட்டு இருத்தல்வேண்டும். அப்பிரபந்தமும் அகப்பட்டிலது. கலைஞர் இதனைக் கவனிக்க. முயற்சி இகழ்ச்சி அடையாது.

இனி, வற்றுப்பளை வடமாகாணம் வவுனியாமாவட்டத்தில் முல்லைத்தீவுப் பிரிவைச் சேர்ந்த முள்ளியவளைப் பகுதியில் உள்ளது. கோவில் விசாலமான வெளியின் நடுவண் மரங்களினால் சூழப்பட்டு இலங்குகின்றது. கோவிலின் பக்கலில் நாம் எல்லோரும் பருகிப் பட்டினியும் தாகமும் போக்கக்கூடிய, அமுதம் அன்ன, நீரைக்கொண்ட கிணறும் உள்ளது. இக்கோயிலைச் சூழக் கிராமங்கள் உள்ளனவாகையால், முள்ளியவளைக்கே புகழை அளிக்கும் தென்னந்தோப்பின் நடுவில் மிளிர்வதாக அக்கோவில் தொலைவில் காட்சியளிக்கும்.

கரையோரப் பாதையினால் கதிர்காமம்செல்லும் யாழ்ப்பாண யாத்திரிகரும் வற்றுப்பளைக் கண்ணகி ஆலயத்தில் சில நாள் தங்கி, தேவியின் வரப்பிரசாதமும் விடையும் பெற்று யாத்திரையைத் தொடர்வது தொன்றுதொட்ட மரபு. அங்ஙனம் ஆண்டுதோறும் செய்துவருகின்றனர். அதனால் அது யாத்திரிகர்விடுதி எனப்படுகிறது. வற்றுப்பளையைக் காணாதார் கண்ணும் கண்ணே.

வற்றுப்பளை வரலாறு

இடையர் குலச் சிறுவர் வற்றுப்பளையிலுள்ள புற்றரையில் மாடு மேய்த்துக் கொண்டு நின்றனர். பாட்டியொருத்தி தள்ளாடித் தள்ளாடி வந்து அங்கு கிடந்த வேப்பம் படவாளின் மேல் குந்தியிருந்து தனக்குப் பசிக்கிறது என்றாள். சிறுவர் பொங்க ஆயத்தம்செய்தனர். தனக்குப் பேன் கடிக்கிறது என்றாள் பாட்டி. சிறுவர் பேன் பார்த்தார்கள். பாட்டியின் தலை முழுவதும் கண்களாக இருக்கக் கண்டனர். பொங்கிய அன்னத்தை உண்ட பின்னர் பாட்டி காணப்படவில்லை. வேப்பம் படவாள் தழைத்து மரமாயிற்று. அவ்விடத்தில் கோயில் ஒன்றை எழுப்பினர்கள். கனவில்கட்டளைபெற்ற பத்தைஞானி என்னுமொருவர் இந்தியாவிலிருந்து வந்து அக்கோயிற் பூசகரானார். அவர் உறைந்த இடம் 'பத்தர் வளவு' என்னும் பெயரால் இன்றும் வழங்குகின்றது.

அக்காலத்துக் கண்டியரசன் ஆணைப்படி கண்ணகி சிலையொன்றைச் செய்து ஊர்வலம் வந்தார்கள். வற்றுப்பளைக்கு வந்ததும் வைத்த சிலை எடுக்கமுடியாமற் போயிற்று. கண்டியரசனும் வன்னியரசனும் ஊரவர்களும் சேர்ந்து வைகாசி விசாகத்தன்று வற்றுப்பளையில் விசேஷ பூசைகள் செய்தனர். சிங்களவரின் வைகாசி விசாகக் கொண்டாட்டமும் தமிழரின் வற்றுப்பளைப் பொங்கலும் அன்று தொடக்கம் இன்றுவரை ஆண்டுதோறும் தவறாமல் நடந்துவருகின்றன என்பர் முல்லைத்தீவு மக்கள்.

பக்தி பரவசம்

இக்கதையைக் கொண்ட பாடல்களைக் கீழே தருகின்றோம். இப்பாடலில் அமைந்த ஒன்பது பாக்களிலும் வற்றுப்பளை என்னும் பெயராதல், அதனைத் தேரும் பெயராதல் வந்திலது. அதனால், இதன் இணைப்பில் இன்னும் பாடல் முன்னே பின்னே இருந்தனவாதல் வேண்டும்.

பக்திபரவசராய்ப் பாடியவர், ஆணாயினும் பெண்ணாயினும் தாம் அறிந்த வரலாற்றினை, இனிதாகவும், எளிதாகவும் சொற்செட்டோடும் சொல்லிமுடித்தனர். அணுவளவும் கற்பனையுலகில் சஞ்சரியாமலும், வர்ணனையில் அவமே விலகாமலும், இவர் சொல்வது ஒரு தனிச்சிறப்பாகும்.

இன்னும் ஓர் அரிய அழகினை இப்பாடலில் காணலாம் கண்ணகித் தெய்வத்தை 'வஞ்சியே' என விபரிக்கின்றார் அப்புலவர் பெருமான். சேரன் செங்குட்டுவனின் தலைநகரம் வஞ்சி. அவ்வஞ்சியிலே தான் கயவாகு மன்னன் முன்னிலையில் கண்ணகி மாதெய்வத்திற்கு அவன் முதலில் கோவில் எடுத்தான். அதனால் கண்ணகி வஞ்சியில் உறைகின்றாள், எழுந்தருளியிருக்கின்றாள், என்பது மத சம்பிரதாயம், வஞ்சியில் உறைபவளை வஞ்சி என்றது இடவாகு பெயர். இனி, பாலமுது பரிவுடன் செய்த பிள்ளைகளும் கண் குளிரக் காண பிரத்தியக்ஷமாய் நில்லாமல் 'பறந்திட்டாய் தாயே' என்றது வஞ்சனை செய்தவாறும். ஆகையால் 'வஞ்சி' என்றார் எனினுமாம். இஃது இரட்டுற மொழிதல் என்னும் உத்தி. வேற்றுப் பொருள் வைப்பணி என்னலுமாம் வற்றுப்பளை அம்மன் சிந்து தருமாறு!

[6-ம் பக்கம் பார்க்க]

கர்மயோகி ஆசிரியர்

யாழ்ப்பாணம், ஞாயிறு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் முப்பத்தேழு ஆண்டுகளாகக் கடமையாற்றி வந்த பிரபல ஆசிரியர் திரு. து. சீனிவாசகம் ஆசிரிய சேவையிலிருந்து நேற்றுத் தொடக்கம் ஓய்வு பெற்றார். இவர் ஆசிரிய சேவையை ஒரு கர்மயோக வழியாகக் கருதி தொண்டாற்றி மாணவர்களினதும் பெற்றோரினதும் நன்மதிப்பிற்கு ஆளாகியிருந்தார்.

இராமகிருஷ்ண விவேகானந்த சமயக்கல்வி அடிப்படையில் வைத்தீஸ்வரவித்தியாலயத்தில் 1930-ம் ஆண்டு தொடக்கம் கடமையாற்றத் தொடங்கினார். அக்காலத்தில் விஞ்ஞான பாடங்கள் கற்பித்தபோதிலும் பாடசாலையின் பல கலை வளர்ச்சிக்குகந்த ஈடுபாடுகளில் இவர் ஊக்கம் காட்டிவந்தார்.

அவரின் விடாமுயற்சியால் பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பயிற்சி பெற்று பின்னர் சமஸ்கிருத தமிழ் பட்டதாரியாகவும் சித்தியெய்தி இத்துறைகளிலும் தனது ஆசிரியத்திறமையை காட்டி வந்தார். இவரின் தொண்டுகள் பாடசாலையில் மட்டும் நிலைத்துவிடவில்லை. ஆசிரிய சங்க முயற்சிகளில் ஈடுபட்டு வடமாகாண ஆசிரிய சங்கக் காரியதரிசியாகவும் சில ஆண்டுகள் விசேஷமாகக் கடமையாற்றினார். கூட்டுறவு இயக்கத்தில் இவர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு 'ஐக்கிய தீபம்' என்னும் பத்திரிகையை பல ஆண்டுகளாக நடாத்தி வந்தார்.

உள்நாட்டு நெசவுக்கைத்தொழிலுக்குப் புத்துயிர் கொடுத்து தேங்கிக்கிடந்த இக்கைத்தொழிலை இயங்கச் செய்து நெசவு சங்கங்களினதும் சமாஜங்களினதும் தளபதியாக விளங்கினார்.

இவரின் ஓய்வு ஆசிரியர் உலகத்தில் ஒரு பேரிழப்பாகவிருந்த போதிலும்- இவர் தொடர்ந்தும் சமூக சேவைகளில் ஈடுபட்டு யாழ்ப்பாணத்தில் இச்சேவைகளைச் சிறப்பிப்பதற்கு ஓர் ஊக்கமுள்ள சேவையாளராக விளங்குவார்என்று நம்புகின்றோம்.

- 'கண்ணப்பன்'

60,000 பேர் சித்தி

கொழும்பு, சனி

ஜி.ஸி.ஈ. [சாதாரண]பரீட்சையில் 60,000 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். ஒருலட்சத்து இருபதினாயிரம் மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள். 10,000 மாணவர்கள் உயர்தர கல்விபயில்வதற்கு தகுதிபெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஸாவிலிருந்து ஐ.நா. துருப்புகள் வெளியேற ஆரம்பித்துவிட்டன

தனது முடிவு பற்றி யு தாண்ட் விளக்கம்

ஐ. நா. (நியூயோர்க்), மே 20

ஐ. அ: குடியரசுக்கும், இஸ்ரேலுக்கும் இடையேயுள்ள காஸாப் பிராந்தியத்திலிருந்து ஐ. நா. துருப்புகள் வாபஸாகத் தொடங்கிவிட்டன. நேற்று மாலை இத்துருப்புகள் வெளியேற ஆரம்பித்தன.

ஐ. நா. துருப்புகள் தங்கியிருக்கும் நாடானது, அது அங்கே இருக்கக்கூடாது என்று கோரும்போது அவை அங்கே முறையாக இயங்க முடியாது என்பதினாலேயே தாம் ஐ. நா. துருப்புகளை வாபஸ்செய்யும்படி உத்தரவிட்டதாக ஐ.நா. பொதுக் காரியதரிசி யு தாண்ட் நேற்று ஐ. நா. பொதுச் சபைக்குத் தெரிவித்தார்.

ஐ.நா. துருப்புகள் வாபஸ் பெறப்பட்டது, மேற்கு ஆசியாவில் நெருக்கடி நிலைமையை மோசமாக்க மாமென்ற ஆழ்ந்த கவலையை யுதாண்ட் தெரிவித்தார்.

யுதாண்டின் முடிவை ஐ. நா. பாரதப் பிரதிநிதி வரவேற்றுள்ளார். ஐ. அ. குடியரசின் கோரிக்கையை அடுத்து வேறெந்த முடிவையும் யுதாண்ட் எடுத்திருக்கமுடியாதென்றார் பாரதப் பிரதிநிதி.

ஜோன்ஸன்

வாஷிங்டனில், மேற்கு ஆசிய நிலைமை பற்றி அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கு சமாதானத்தை நிலைநாட்ட ஐ. நா. எடுக்கும் முயற்சிகளுக்கு அமெரிக்கா தனது ஆதரவை அளிக்குமென அவர் மேலும் கூறியதாகத் தெரிகிறது.

வால்காட்டு விவகாரம்

பம்பாய், மே. 20

பிரபல கடத்தல் நபர்களான வால்காட்டுக்கும் டோன்ஸேக்கும் வேவு பார்த்ததாகத் தொடரப்பட்ட ஒரு வழக்கில் லெபனான் நாட்டு இராணுவ நீதிமன்றம் 7 வருஷக் கடுங்காவல் தண்டனை விதித்துள்ளது. நீதிமன்றத்துக்கு அவர்கள் வராமலே, விசாரணை நடந்து தீர்ப்பளிக்கப்பட்டது.

பம்பாய் பொலிசாருக்கு லெபனான் அதிகாரிகள் இத்தகவலைத் தெரிவித்துள்ளனர்.

பம்பாயிலுள்ள ஒரு ஹோட்டலில் வால்காட்டையும், டோன்ஸையும் கண்டு பிடிப்பதற்கு முன்னதாக பல ஐரோப்பிய நாடுகளில் அவர்களைத் தேடிச் சென்ற இந்திய குற்ற இலாகாப் பிரிவு அதிகாரிகள், லெபனான் அதிகாரிகளுக்கு வேண்டிய தகவலை அளிப்பதில் உதவியாயிருந்தனர்.

பொய்க் கையெழுத்திட்ட பாஸ்போர்ட்டுகளைப் பயன்படுத்திக் கொண்டு சட்ட விரோதமாக நுழைந்ததாக வால்காட்டுக்கும் டோன்ஸேக்கும் சென்னை நீதிமன்றம் 5 வருஷக் கடுங்காவல் தண்டனை விதித்திருப்பது தெரிந்ததே. பம்பாய் நீதிமன்றத்தில் அவர்கள் மீது பல வழக்குகள் சம்பந்தமாக விசாரணை நடக்கிறது.

'தி. மு. கழக ஆட்சியை கவிழ்த்துவிட முடியாது'

மீண்டும் வருவோம் என்கிறார் அண்ணு

சென்னை, மே 20

தி. மு. கழக ஆட்சியை யாராலும் கவிழ்க்க முடியாது என்று தமிழக முதன் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை கூறினார்.

சென்னை ஒற்றைவாடை அரங்கத்தில், சென்னை சிம்சன் அண்ட் கூட்டுக்கம்பனிகள் தேசிய பணியாளர் சங்கத்தின் சிறப்புக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே திரு. அண்ணுதுரை இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது-''தி.மு.கழக ஆட்சியை நாங்கள் நினைத்தால் கவிழ்த்துவிடுவோம்'' என்றுகான் கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசிவருகிறார்கள்.

ஆட்சியைக் கவிழ்ப்பது ஒன்றும் கடினமானதல்ல. ஆனல் அது நடப்பதுதான் கஷ்டமானது.

எங்கள் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டால் தமிழ் நாட்டில் மீண்டும் தி. மு. கழக ஆட்சி ஏற்படாது என்று மட்டும் எண்ணுதீர்கள்.''

பத்திரிகை சபை மசோதா மீண்டும் வருகிறது

கொழும்பு, சனி

பத்திரிகை சபை ஒன்றினை அரசாங்கம் நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதைத் தொடர்ந்து அதற்கான நகல் மசோதா விரைவில் பத்திரிகையின் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப் படவிருக்கிறது. அரசாங்க பாராளுமன்றக் குழுவினர் முதலில் பரிசோதனை செய்தபின்னரே இவ் நகல் மசோதா மந்திரிசபைக்குச் சமர்ப்பிக்கப்படும்.

உத்தேசிக்கப்பட்ட இப் பத்திரிகைச்சபையில் தலைவர் தவிர்ந்த மற்றைய சபை அங்கத்தவர் தேசாதிபதியால் நியமிக்கப்படுவர். சபையின் பிரதான நோக்கங்கள் வருமாறு-

பத்திரிகையின் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்.

பத்திரிகைகள் சுதந்திரமாகச்செயற்பட உதவுதல்.

பத்திரிகைக் கெதிராகச் செய்யப்படும் முறைப்பாடுகளை ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளல்.

சென்ட்டர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், நீதிபதிகள், பாராளுமன்ற உத்தியோகத்தர்கள் இச்சபையில் அங்கத்தவர்களாக நியமனம்பெறத் தகுதியற்றவர்களாவர்.

இச்சபைக்குத் தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள் ஆறு ஆண்டுகளுக்கு மேல் பதவி வகிக்க முடியாது.

உத்தேசிக்கப்பட்ட இச் சபையின் அதிகாரங்களின் கீழ் இயங்கும் அங்கத்தவர்கள் அல்லது ஊழியர்களின் மேல் எதுவிதமான வழக்கோ அன்றேல் சட்ட நடவடிக்கையோ தொடர இம் மசோதாவில் இடமளிக்கப் படவில்லை.

ஆஸ்பத்திரிக்கு ரூபா 10 கோடி

கொட்டாஞ்சேனை, சனி

நாட்டின் பல பாகத்திலுமுள்ள ஆஸ்பத்திரிகளில் இடவசதி குறைவு காரணமாகவும், கட்டில பற்றாக்குறை காரணமாகவும், கடுமையான நோயாளர்கள் பலர் சிகிச்சைபெறுவதில் கஷ்டம் அனுபவித்து வருகின்றனர். இக்குறையைப்போக்க சுகாதார மந்திரி திரு. ஜயவர்த்தனு முயற்சி எடுத்து வருகின்றார்.

ஆஸ்பத்திரிகளில் ஏற்படும் இடவசதிக்குறைவு சம்பந்தமான பல புகார்கள் சுகாதார இலாகாவால் பரிசீலனை செய்யப்பட்டன. இதன்காரணமாக அடுத்த வரவுசெலவுத் திட்டத்தில் இதற்கென 10கோடி ரூபா மேலதிகமாக ஒதுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ரூ. 50 ஆயிரம் நகை திருட்டு

சென்னை, மே 20

வட்டிக்கடை ஒன்றில் ரூ. 50 ஆயிரம் மதிப்புள்ள நகைகள் திருட்டுப் போயின. துப்புத் துலக்கப் பொலிஸ் நாய் அழைக்கப்பட்டுள்ளது.

சென்னையை அடுத்த திருமழிசையில் இந்த மர்மத் திருட்டு நடந்தது.

ஹனேய் நகர எல்லைக்குள் முதற்தடவையாக தாக்குதல்

அமெரிக்க விமானங்கள் அலைஅலையாகச் சென்றன

சைகோன், மே20

ஹனேய் நகர எல்லைக்குள் முதற்தடவையாக நேற்று அமெரிக்க விமானங்கள் ஒரு மின்சக்தி நிலையத்தைத் தாக்கின. எவ்வளவு தூரம் சேதம் விளைவிக்கப்பட்டது என்பது பற்றிய விபரங்கள் இன்னும் தெரியவில்லை.

இத்தாக்குதலின் போது 3வட வியட்னும் மிக் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாக அமெரிக்க ராணுவம் அறிவித்தது.

புதுடில்லியிலுள்ள வடவியட்னும் பிரதான ஸ்தானிகர், இத்தாக்குதலில் 9 அமெரிககவிமானங்கள்சுட்டு வீழ்த்தப்பட்டதாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க விமானத்தாக்குதலுக்கெதிராக வடவியட்னும் துருப்புகள் உபயோகித்த விமான எதிர்ப்புஇயந்திரத் துப்பாக்கிகள் 'மிகப் பயங்கர'மானவையாக இருந்ததாக ஒரு பார்வையாளர் தெரிவித்துள்ளார்.

வடவியட்னும் எல்லைக்குள் அமெரிக்க விமானங்கள் அலையலையாக வந்து, சிவிலியன் மக்கள் வாழும் பகுதிகளுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் குண்டுவீசியிருப்பது, வியட்னும் போரை விஸ்தரிக்கச் செய்யும் நடவடிக்கையாகுமெனவடவியட்னும் செய்தித்தாபனம் கண்டித்துள்ளது.

மதுவிலக்கு நீக்க பொதுஜன வாக்கு

அண்ணு யோசனை

உதகமண்டலம், மே 20

மதுவிலக்கைநீக்கவேண்டுமென்ற கோரிக்கை அதிகரிக்குமானல், வாக்கெடுப்பு மூலம் பொதுஜன அபிப்பிராயத்தைக் கோர வேண்டியிருக்கும் என்று தமிழக அரசு முதல் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை கூறினார்.

ஆனல், அரசாங்கம் மதுவிலக்கை ரத்து செய்யாது என்று அவர் திட்டவட்டமாகக் கூறினர். நீலகிரி லயன்ஸ் கிளப்பில் பேசுகையிலேயே அவர் மேற்கண்ட கருத்துக்களைத் தெரிவித்தார்.

இந்திய பார்லிமெண்டை சுற்றி தடையுத்தரவு

புதுடில்லி, மே 20

பார்லிமெண்ட் கட்டிடம் உள்ள பகுதிகளிலும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதிக்கும் உத்தரவை டில்லி மாஜிஸ்திரேட் நேற்று முன்தினம் இங்கு பிறப்பித்துள்ளார்.

பிரேத ஊர்வலங்களுக்கோ அல்லது மத சம்பந்தமான ஊர்வலங்களுக்கோ இந்த உத்தரவு பொருந்தாது.

பார்லிமெண்ட் கூட்டத் தொடர் நடக்கும் போது பார்லிமெண்ட் கட்டிடத்தைச் சுற்றியுள்ள பகுதியில் ஏராளமான ஊர்வலங்களும் கூட்டங்களும் நடந்தால் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்பதால்இதைத் தடுக்கவும், உயிருக்கும் பந்தோபஸ்துக்கும் அபாயம் ஏற்படுவதைத் தடுக்கவும் துரிதமான நடவடிக்கைகள் அவசியம் என்று மாஜிஸ்திரேட் தமது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

பார்லிமெண்ட் கூட்டம் 22-ம் திகதி ஆரம்பமாகிறது.

சீன உள்நாட்டு மோதல் பரவுகிறது

டோக்கியோ, மே 20

சீனாவில் மாசேதுங் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளருக்குமிடையே நடைபெற்று வரும் மோதல்கள் தற்போது வட கிழக்கு மாகாணத்துக்கும் பரவியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் அங்கு நடைபெற்ற கலவரங்களில் பலர் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

'தி. மு. கழக ஆட்சி நிலைத்துநிற்கும்'

—சஞ்சீவரெட்டி

சென்னை, மே20

''தமிழ்நாட்டில் தி. மு கழகஆட்சி நீடித்து நிற்கும் என்று டில்லி பார்லிமெண்ட் சபாநாயகர் திரு. சஞ்சீவ ரெட்டி, மயிலாப்பூரில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

''தமிழ்நாட்டில் தி. மு கழகஆட்சிமுறையைப்பாராட்டவேண்டும். அவர்கள் முன் எச்சரிக்கையுடன் நியாயமாக நடந்துகொள்கிறார்கள். எல்லோருடைய ஒத்துழைப்பையும் கேட்கிறார்கள். இந்த அரசாங்கம் நிலைத்துநிற்குமென நான் நம்புகிறேன்'' என்றுஅவர்மேலும் கூறினர்.

ரூ.12ஆயிரம் மோசடி

சென்னை, மே20

கார்வாங்கிக் கொடுப்பதாகக்கூறி, சென்னையில் ரூ. 12ஆயிரம்மோசடி நடந்தது. இது சம்பந்தமாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ்காரர்வேடத்தில் வந்து ஏமாற்றிய ஒரு ஆசாமியைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

தெ.மே.ஆபிரிக்க நிர்வாகசபை

ஐ.நா.[நியூயோர்க்]மே20

தென்மேற்கு ஆபிரிக்காவை நிர்வகிக்கும் பொருட்டு 11 அங்கத்துவநாடுகளடங்கிய நிர்வாகசபை ஒன்றை ஐ.நா. பொதுச்சபை நேற்று நியமித்தது.

பொதுச்சபையின் விசேஷ கூட்டமொன்றிலேயே இந்நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது.

தென்மேற்கு ஆபிரிக்கா தற்போது தென்னபிரிக்காவின் நிர்வாகத்தின் கீழுள்ளது.

'கொராவோ' பரவாது பார்க்கவும்

சவான் கோரிக்கை

புதுடில்லி, மே20

மேற்கு வங்காளத்தில் கடைப்பிடிக்கப்படும்தொழிலாளர் முற்றுக்கைக் கிளர்ச்சியான 'கொராவோ'முறை அங்கு மேலும் பரவாதிருக்குமாறுபார்த்துக்கொள்ளும்படி இந்திய மத்திய உள்துறை மந்திரி திரு. சவான் மேற்குவங்காளமுதல்மந்திரி திரு' அஜோய் முக்கோர்ஜியைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

வெறும் அபாண்டம்

புதுலில்லி, மே20

இந்தியா அணுஆயுதப்பரிசோதனை ஒன்றை நடத்துமெனப் பாகிஸ்தான் தேசிய அசெம்பிளியில் கூறப்பட்டது. 'வெறும் அபாண்டம் என இங்கு வர்ணிக்கப்பட்டது.

பாரத-ரஷ்ய ஒப்பந்தம்

மாஸ்கோ, மே20

புதியபாரத-ரஷ்ய கலாச்சார ஒப்பந்தமொன்று இரு நாடுகளுக்குமிடையே இங்கு சைச்சாத்தாகியது. இந்த ஒப்பந்தம் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கும்.

இதற்கிடையில், புதுடில்லியில் நேற்று ரஷ்ய திரைபடவிழாஒன்று ஆரம்பமானது. இந்தியமத்தியதகவல் ஒலிபரப்பு மந்திரி திரு. கே. கே. ஷா.விழாவை ஆரம்பித்துவைத்தார்.

செஞ்சிலுவையும் சிவப்பு முக்கோணமும்

புதுடில்லி, மே20

எவ்விதம் ஒரு செஞ்சிலுவை அடையாளம்ஓர்ஆஸ்பத்திரியைக் குறிக்கிறதோ, அதேபோல் இனிமேல் ஒரு சிவப்பு முக்கோணம் குடும்பக்கட்டுப்பாட்டு நிலையத்தைக்குறிக்கும்.

ஏற்கனவே இச்சிவப்புமுக்கோணம் டில்லியிலும், பிற இடங்களிலுமுள்ள குடும்பக் கட்டுப்பாட்டு நிலையங்களுக்கு வெளியே காட்சியளிக்கின்றது. அத்துடன் குடும்பக்கட்டுப்பாடு விளம்பரங்கள், பிரசுரங்கள், வாகனங்கள் சேவையாளர்களின் கைப்பட்டைகள் ஆகியவற்றிலும் இந்த அடையாளம் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மக்கள் ஆசியே இறைவனின் ஆசி"

பிரிவுபசார விழாவில் உதவி அரசாங்க அதிபர்

உடுவில், சனி

அரசாங்க ஊழியர்களாகப் பணி புரிபவர்கள் கடமையுணர்ச்சி உடையவர்களாவிளங்க வேண்டும். மக்களிடையேயிருந்துபாராட்டு விழாக்களை எதிர் பார்த்து அல்லது பெருமையை விரும்பிப் பணி புரியக் கூடாது. தனது கடமையை உணர்ந்து பணி புரிய வேண்டும். உதவி அரசாங்க அதிபர் வலி-வடக்குக்காரியாதிகாரியாக் கடமையாற்றிய காலத்தில் அவர் கடமையுணர்ச்சியுடையவராக விளங்கினார் என வலி-வடக்குக் காரியாதிகாரியாகக்ப் பணி புரிந்து உதவி அரசாங்கஅதிபராகப் பதவியேற்றுள்ள திரு.தி.முருகேசம்பிள்ளைக்கு சங்குவேலி கிராம முன்னேற்றச் சங்கமும், பொது மக்களும் அளித்த பிரிவுபசார விழாவில் வலி-வடக்குக்காரியாதிகாரி திரு.பற்றிக் கூறினார்.

சங்குவேலி தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு திரு.மு. இராமலிங்கம் தலைமைவகித்தார்.

உடுவில் கிராமசபைத்தலைவர் பேசுகையில் "நீதி வழி நின்ற பெரியார்களுக்கும் தருமசீலர், நேர்மையாளர் இவர்களுக்குமே பாராட்டு விழா உரித்தானது. நமது உதவி அரசாங்க அதிபர் காரியாதிகாரியாக இருந்த காலத்தில் விவசாய மக்களுக்கும், ஒதுக்கப்பட்ட மக்களுக்கும் சிறந்த சேவையாற்றியுள்ளார்.

உதவி அரசாங்க அதிபர் திரு.முருகேசம்பிள்ளை தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:-

வலி-வடக்கு மக்களுக்காக விசேஷமாக ஒன்றையும் செய்யவில்லை. தெய்வழிபாடுகடமைகளை நிறைவேற்றுதல் மூலமும் செய்யலாம் 35 அண்டுதளுக்கு முன் யோகசுவாமிகள் எனக்குக்கூறியதை நினைத்து சிறிய அளவில் பரீட்சித்து வந்தேன். நாம் கடமையைச் செய்ய மக்களுடைய அன்பு ஆதரவு, ஆசிஎல்லாம் கிடைக்கும். அதையே இறைவன் ஆசிஎன்றுகருதுகிறேன்.

சங்குவேலி கிராமமுன்னேற்றசங்க ஆதரவில் ஆசிரியர்திரு.செல்லத்துரை வாழ்த்துப்பா வாசித்தார்.

உடுவில் கிராமசேவையாளர் திரு.எஸ்.சின்னத்தம்பி வித்துவான்சி. ஆறுமுகம், செல்லத்தம்பி, ஆசிரியர்கந்தசாமி ஆகியோரும் பேசினார்கள்.

வானில் வாள் வைத்திருந்ததாக வழக்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மாஜிஸ்திகோர்ட் வாசலில் வான் ஒன்றில் வாள் ஒன்றுடன் இருந்ததாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஸ்டான்லி வீதியைச்சேர்ந்த ஏ. நவரத்தினம் என்பவர் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ஜாமில் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

சின்னப்பு சின்னத்துரை என்பவரை வாளால்வெட்ட எத்தனித்ததாகவும், பாவிக்கத் தடைசெய்யப்பட்ட ஆயுதத்தை வைத்திருந்ததாகவும் இவர் மீது குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் பொலிசாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. எதிரிக்காக புரக்டர் தளைய சிங்கம் யோகநாதன் ஆஜராகியிருந்தார், வாள் இருந்ததாகச் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைப்பற்றப்பட்ட வானை எதிரியின் வழக்கறிஞரின்வேண்டுகோளுக்கிணங்க 10,000 ரூபா சரீரப்பிணையில் விட அனுமதித்த மாஜிஸ்திரேட் எதிரியை 250 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து ஆவணி மாதம் 20-ம் திகதி அவரை மீண்டு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். [ந. நி.]

'போட்டிபொறுமையாக மாறக்கூடாது'

சங்கானை, சனி

"நாடகக்கலையில் போட்டிகள் கட்டாயம் இருத்தல் வேண்டும். ஆனால் அப்போட்டி பொறுமையாக உருவெடாதுபார்த்துக் கொள்ள வேண்டும். தமிழ்கலைகளுள் உயர்ந்தது நாடகக்கலையே அன்று கலைஞர்களாலும் அண்ணாவிகளாலும் போற்றப்பட்ட இக்கலைகாலத்திற்கேற்ற மாற்றங்களுடனும் விஞ்ஞானப் புதுமைகளுடனும் நாடக மன்றபெயரில் மிகவேகமாகவளர்ந்து வருகிறது. என பண்டத்தரிப்புமகளிர் கல்லூரியில் நடைபெற்ற "இரத்தமுத்திரை" என்னும் நாடக அரங்கேற்றத்தில் பூநகரி மகாவித்தியாலய அதிபர் திரு.மு.சிவானந்தம் சிறப்புரை நிகழ்த்துகையில் கூறினார்.

தொடர்ந்துஅவர்பேசுகையில் இத்தகைய துரிதவளர்ச்சிக்கு இன்றையவாலிபர்கள் முன்னின்று உழைத்து வருவது பெரிதும் பாராட்டத்தக்கது. அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் இத்தகைய பாணியில் வேகம் காட்டுவதுகண்டு தமிழ்கூறும் நல்லுலகம் பெருமைப்படவேண்டும்.

கிணற்றில் விழுந்து குழந்தை மரணம்

சாவகச்சேரி, சனி

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த தேவராசா என்ற 6வயதுடைய குழந்தை இன்று காலை வீட்டுக் கிணற்றில் விழுந்து மரணமானது.

மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு எல். கே. திரவியநாயகம் பாதுகாப்பில்லாதகிணறுகளால் ஆபத்துகள் அடிக்கடி ஏற்படுவதாகக் கூறி விபத்தினால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

வாலிபன் தற்கொலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

தாமே நச்சுத் திராவகம் அருந்தியதாகஎழுதிவை துவிட்டு, நச்சுத் திராவகம் அருந்தி மரணமானார் ஒரு வாலிபர். மரணமான யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த குட்டிதுரை ராஜா [23வயது] என்ற வாலிபன் மரணம் சம்பந்தமாகத் திடீர் மரண விசாரணை அதிகாரி நா.இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினார்

காலஞ் சென்றவர் சுன்னாகத்தில் ஒரு தையல்காரராகக் கடமையாற்றியதாகவும் சம்பவம் நடந்த தினத்தன்றிரவு சாப்பிட்டுவிட்டு வீட்டின் வெளிப்புறத்தில் படுத்திருந்ததாகவும், சிறிது நேரத்தில் அவரது வாயால் நுரை தள்ளியதாகவும் அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதாகவும் மரணவிசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

மரணமானவரை யாழ்ப்பாணம் சட்ட வைத்தியஅதிகாரி டாக்டர் எஸ்.சுப்பிரமணியம் பிரேதபரிசோதனை செய்தார். மரணமானவரின் தந்தையான குட்டி, தாயார் சின்னத்தங்கம், சகோதரியான சிவபாகியம், பொலிஸ்கான்ஸ்டபிள் தம்பி ராஜா ஆகியோரும் சாட்சியமளித்தபின்னர் தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. [ந நி]

தவறு

"கார் விபத்தில் வாலிபர் மரணம்' என்றதலைப்பில்இம்மாதம் 18ந் திகதி வியாழக்கிழமை வெளியான 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த செய்தியில் "சம்பந்தப்பட்ட கார் சாரதியான மானிப்பாயைச் சேர்ந்த கே. சேனாதிராசாவை 1000 ரூபாய் பிணையில் செல்ல அனுமதித்த" என்று குறிப்பிடப்பட்டிருந்தது தவறாகும். இத்தவறு நேர்ந்தமைக்காக வருந்துகிறோம். —[ஆ-ர்.]

கான்ஸ்டபிளை தாக்கியதாக வழக்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு

பொலிஸ் கான்டபிளை தாக்கிக் காயப்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் தந்தை, தாய், மகன், மகள் ஆகியோர் யாழ்ப்பாணம் மாஜிஸடிரேட் திரு. ஜமீல் முன்னிலையில் நேற்று ஆஜராகினர்.

இவ்வழக்கில் கரையூரைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் சிமியோனை அடித்துக் காயம் விளைவித்ததாகவும், கடமையை செய்யவிடாமல் தடுத்ததாகவும் குருநகரைச் சேர்ந்த ராயப்பு அந்தோனிப்பிள்ளை, மனைவி றெஜனா, மகன் நெல்சன், மகள் யூலியட் ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் புறக்டர்களான எஸ். சி. கதிரவேலு, ஏ. அன்ரனி, ஆர். விஸ்வநாதன் ஆகியோர் ஆஜராகினர். விசாரணை பின்போடப்பட்டுள்ளது.

பூநகரியில் திருடர் தொல்லை

பூநகரி, சனி

பூனகரி கிராமசபைத்தலைவர் திரு.த.செல்லத்துரைக்குச் சொந்தமான பூநகரி வாடியடியிலுள்ள கடையில் இரவு நேரத்தில் திருடர்கள் ஓடுபிரித்து இறங்கி சுமார் 5000ரூபா பெறுமதியான பிடவைகளைத் திருடியதாகவும், அதே இரவு க. ஆறுமுகத்துக்குச் சொந்தமான வாடியடியிலிருந்த பலசரக்குக் கடையிலும்கதவை உடைத்து திருடர்கள் உட்புகுந்து பொருட்களைக் கொள்ளையடித்ததாகவும் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பொலிஸ்பகுதியினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

6மாத கடூழிய சிறைத்தண்டனை

யாழ்ப்பாணம், சனி

பாஷையூரிலுள்ள வீடொன்றில் 50 ரூபா பெறுமதியான சமையல் பாத்திரங்களைக் களவாடியதாக பாஷையூரைச்சேர்ந்த தளையசிங்கம் பெனடிட் என்ற வாலிபர்மீது கரையூர்பொலிசார் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம்மாஜிஸ்திரேட் திரு.எம்.ஜமீல்முன்னிலையில் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கின் எதிரியான பெனடிட் தான் குற்றவாளி என ஒப்புக்கொண்டதால் மாஜிஸ்டிரேட் அவருக்கு 6மாத கடூழிய சிறைத் தண்டனை விதித்தார். [ந.நி.]

பெரியகடை

விற்பனை நிலையம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மின்சார நிலையவீதியிலுள்ள விற்பனைத் திணைக்கள விற்பனை நிலையம்இன்று திருமதி வேர்ணன் அபயசேகராவினால் மாலை 5-30 மணிக்குதிறந்து வைக்கப்படும்.

சங்கானையில்

திருக்குறள் மகாநாடு நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழ்மறைக் கழகத்தின் பதினைந்தாவது திருக்குறள் மாநாடு இம்முறை சங்கானையில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படவிருக்கிறது. இம்மாதம் 22-ம் திகதி தொடக்கம் மூன்று தினங்கள் சங்கானை இந்து வாலிபர் மன்றத்தின் ஆதரவில் சங்கானை அரசடி வைரவ ஆலய முன்றலில் இம்மாநாடு நடைபெறுமென்றும், முதலிருநாட்களில் காலை முதல் மாலைவரை குறளோவியக்கண்காட்சி இடம்பெறுமென்றும், மூன்று தினங்களிலும் இந்திய-இலங்கை அறிஞர்களின் விரிவுரைகளும், கவியரங்கம், கலையரங்கம் மற்றும் சமயக் கருத்தரங்கம் முதலியனவும் இடம் பெறுமென்றும் சங்கானை இந்து வாலிபர் மன்றமும் தமிழ்மறைக் கழகமும் அறிவிக்கின்றன.

முதல்நாள் 22-ம் திகதி திங்கட்கிழமை நாகலிங்க சுவாமிகள் அரங்கில் ஆரம்பமாகும் நிகழ்ச்சிகளுக்கு தமிழ்மறைக் கழகத்தலைவரும் கிளிநொச்சி எம். பி. யுமான திரு. கா. பொ. இரத்தினம் தலைமைவகிப்பார். பிற்பகல் 4-00 மணிக்கு வழக்கம்பராய் அம்மன் கோவிலடியிலிருந்து திருக்குறள் ஏட்டுச்சுவடி ஊர்வலத்துடன் விழா ஆரம்பமாகும். வட்டுக்கோட்டை எம். பி தொடக்கவுரை நிகழ்த்துவார். இலங்கைப்பல்கலைக் கழக விரிவுரையாளர் வித்துவான் பொன். முத்துக்குமாரன், திரு. ஆ. தேவராசன் ஆகியோர் உரைநிகழ்த்துவர். இரவு 8-30 மணிக்கு கவிஅரங்கு ஆரம்பமாகும். இரசிகமணி கனக. செந்திநாதன் தலைமைவகிப்பார். வள்ளுவர் கண்ட கனவு, வள்ளுவர் கண்ட இல்லம், வள்ளுவர் கண்ட அரசியல், வள்ளுவர் கண்ட சமுதாயம், வள்ளுவர் கண்ட அமைச்சு, வள்ளுவர் கண்ட காதல் என்ற பொருள்களில் முறையே கவிஞர்கள் இ. நாகராஜன், செ. கதிரேசர் பிள்ளை, அம்பி, க. கணபதிப்பிள்ளை, வி. கந்தவனம், திமிலைத்துமிலன் ஆகியோர் பாடுவர். இரவு 9-00 மணிக்கு திரு. அ. தையல்பாகர் ஜே. பி. தலைமையில் கலை அரங்கம் நிகழும். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியினரின் 'வாழ்வைத் திருத்திய குறள்' என்ற நாடகமும், திரு.ஏ. ரி. பொன்னுத்துரை டைரக்ட் செய்யும் குரும்பசிட்டி சன்மார்க்க நாடக மன்றத்தாரின் 'பிற்பகலிலே..' என்ற நாடகமும் இடம்பெறும்.

1964, 66-ம் ஆண்டுத் தமிழ் மறைக் கழகத் தேர்வில் பதக்கப் பரிசில் பெற்றவர்களுக்கு முதல்நாள் நிகழ்ச்சியின்போது பரிசில்கள் வழங்கப்படும்.

23-ம் திகதி செவ்வாய்க்கிழமை கதிரவேலுச் சட்டம்பியார் அரங்கில் காலை

[5-ம் பக்கம் பார்க்க]

கடைக

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்

திருப்பி நிரப்பிய சீமந்து விற்பனை

திருகோணமலையில் திருப்பி நிரப்பிய சீமந்து தரம் "A" கீழ்காணும் விலைப்படி விற்பனைக்குள்ளது.

500 பைகள் வரை -- ரூ 8-05 சதப்படி திருமலை ஸ்ரோஸ்சில்

500க்கு மேல் -- ரூ 7-90 சதப்படி திருமலை ஸ்ரோஸ்சில்

சீ. டபிள்யூ. ஈ. சீமந்து விற்பனைப் பகுதியிலிருந்து வாங்குதற்கான ஒழுங்குகள் செய்து கொள்ளலாம். வேலை நேரங்களில் நம் 2, வொக்ஷோல் வீதி, கொழும்பு-2.

ஜெனரல் மனேஜர்.

கோயில் தேவைகளுக்கும் விவாகம் முதலிய விசேஷ வைபவங்களுக்கும் உபயோகமான

அபிஷேக சந்தனம்

கோயில் அபிஷேக திரவியங்கள், வாசனைமிக்க பன்னீர் பரிமளம் நிறைந்த சந்தன வில்லைகள்

விளைவு சூடம்

கிடைக்குமிடம்:

சுந்தரம் பிரதர்ஸ்

மருந்துச்சரக்கு வியாபாரம்

(புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை)

73, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

விளம்பரம்

கோழித் தீன்

கோழித்தீன் தயாரிப்பதற்கு வேண்டிய மருந்துகள் தானியங்கள்-தவிடு-மீன் எண்ணை தொகையாக எம்மிடம் ஆனி மாசம் 15-ம் திகதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். மனேஜர், அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1789

விற்பனையாளர் தேவை

தகமை- வயது 20-க்கு மேலும் 30-க்கு உள்ளும் இருத்தல். வேண்டும்.

தமிழ் எட்டாம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இரு நற்சாட்சிப்பத்திரம் வேண்டும்.

கூட்டுறவுப் பயிற்சி பெற்றவருக்கு விசேஷ சலுகை அளிக்கப்படும்.

பிணை- ரூபா 500/-

வேதனம் உட்பட 50 தொடக்கம் 75 வரை.

விண்ணப்பம் கடைசித் திகதி- 27-5-67.

கௌரவ காரியதரிசி, கோவிலாக்கண்டி ப. நோ. கூ. சங்கம் என்ற விலாசத்திற்கு தராதரப்பத்திரங்களின் பிரதியுடன் பதிவுத் தபால்மூலம் அனுப்பவேண்டும். 1792

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா
நடித்த
பெண்ணே நீ வாழ்க!

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஸ்ரீகாந்த் - நிர்மலா
நடித்த
வெண்ணிற ஆடை

கேள்வி விண்ணப்ப அறிவித்தல்

பருத்தித்துறை நகரின் நகரசுத்திகரிப்பு சேவையை மேற்கொள்வதற்கு முத்திரையிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் கீழே ஒப்பமிடுபவரால் 15-6-67-ம் திகதி நண்பகல் 12 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்பத்திரத்திற்காக 50 ரூபாவும் [இப்பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது] வைப்புப் பணமாக 250 ரூபாவும் செலுத்தி இவ்வலுலகத்திலிருந்து 30-5-67-ந் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்படும் பத்திரத்தில் கேள்வி விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

இதுசம்பந்தமாக மேலும் விபரங்கள் அறிய விரும்பின் இவ்வலுவலகத்தில் வேலைநேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

ந. நடராசா
தலைவர்
நகரசபை,
பருத்தித்துறை.

நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை,
20-5-67. 1791

பீடிப்புகையிலை உற்பத்தியாளர் கஷ்டம்

சுழிபுரம், சனி

இப்பகுதியில் பீடிப்புகையிலை உண்டுபண்ணியவர்கள் பெரும் அவதிப்படுகின்றனர். வெட்டிய புகையிலையை வைக்க இடமில்லாமலும் நன்கு உலர்த்தியவற்றை விற்பனைசெய்யமுடியாமலும் கஷ்டப்படுகின்றனர்.

MANOHARA
Jaffna
Daily at 4-45, 7-00, 9-45
David Niven
in
CAPTIVE CITY

4-வது வெற்றி வாரம

கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] நவா [கொம்பனித்தெரு] மொடேர்ன் [பண்டாரவளை]
விஜிதா [ஹட்டன்] வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தீவொளி [நுவரெலியா]
மொடேர்ன் [பதுளை]

தென்னகமெங்கும் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.

ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
ரங்கராவ் - நாகேஷ்
ஆர். சரஸ்வதி,
மனோகர்,
சீதாலட்சுமி,
மாதவி,
கள்ளபாட்
நடராஜன்
திறம்பட நடித்து
தென்னகமெங்கும்
100 நாட்களுக்கு
மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்.

ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்
குமரிப் பெண்

இசை: எம்.எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன்: ராமண்ணா

திருக்குறள் . . .

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

9-00 மணிக்கு ஆரம்பமாகும். 2-ம் நாள் நிகழ்ச்சிகளுக்கு யாழ்ப்பாணமாவட்ட கல்வி ஆலோசகர் திரு. வி. திருநாவுக்கரசு தலைமை வகிப்பார். 9-40 மணிக்கு 'திருக்குறளின் உட்கிடக்கை சைவசித்தாந்தமே' என்னும் பொருள்பற்றி தமிழக அறிஞர் சித்தாந்தசிகாமணி க. வச்சிரவேலு முதலியார் விரிவுரை நிகழ்த்துவார். தொடர்ந்து திரு. ஆ. கல்யாணசுந்தரேசன், செல்வி கு. ஜெகதாம்பிகை செல்வத்துரை, வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம் ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம்தலைமையில்ஆரம்பிக்கும் பிற்பகல் நிகழ்ச்சிகளில் பண்டிதர் இ, நமசிவாயம், திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவர். வில்லிசைக் கலைஞர் சபா சதாசிவம் குழுவினரின் 'சிலம்புச்செல்வியும் திருக்குறளும்' என்னும் பொருளில் வில்லுப்பாட்டும் இடம்பெறும். மாலை 6-30 மணிக்கு சமயக் கருத்தரங்கு, வித்துவான் கா. கி. நடராஜன் தலைமையில் திருவாளர்கள் கே. ஈ. மதியாபரணம், சாள்ஸ் தசில்வா, முகம்மது நஸீர், பண்டிதை செல்விதங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் முறையே திருக்குறளில் கிறித்தவ நெறிகள், திருக்குறளில் பௌத்த நெறிகள், திருக்குறளில் இஸ்லாமிய நெறிகள், திருக்குறளில் சைவ நெறிகள் என்னும் பொருள்களில் உரையாற்றுவர்.

24-ம் திகதி புதன்கிழமை அம்பலவாண நாவலர் அரங்கில் திரு, மு. வைரமுத்து தலைமையில் 3-ம் நாள் விழா ஆரம்பமாகும். 3-45 மணிக்கு இசைமணி என். அன்னராசா குழுவினரின் மெல்லிசைக்கச்சேரியைத் தொடர்ந்து வரும் நிகழ்ச்சிகளில் வித்துவான் சி. ஆறுமுகமும், அ. அமிர்தலிங்கம் எம் பி.யும் விரிவுரை நிகழ்த்துவர். திருக்குறள் மனன, பேச்சுப் போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கு திருமமங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசில் வழங்குவார்.

7-30 மணிக்கு முதலியார் செ. சின்னத்தம்பி தலைமை தாங்கும் பட்டிமன்றத்தில் வள்ளுவர் ஓர் இலக்கிய மேதை என்று திரு. க.சிவானந்தமும், வள்ளுவர் ஒரு சமயவாதியென்று திரு. க. நவசோதியும், வள்ளுவர் ஓர் உளவியல் வல்லுனர் என பண்டிதர் க. சச்சிதானந்தமும், வள்ளுவர் ஓர் அரசியலறிஞர் என புதுமை லோலனும், தத்துவ ஞானியென்றும் கலைஞர் என்றும் திரு. க. கயிலாயநாதனும், திரு. மு. சிவானந்தமும் வாதிப்பர். 9-40 மணிக்கு கலையரங்கு நிகழும். வழக்கறிஞர் மு. க. சுப்பிரமணியம் தலைமை வகிப்பார். சங்கீத பூஷணம் ஈஸ்வரிதேவி குமாரசிங்கம், இசைக்கலைஞர் ந. கந்தசாமி ஆகியோரின் இன்னிசையும், யாழ். மறுமலர்ச்சி மன்றத்தாரின் 'சீதா கல்யாணம்' நாடகமும் கலையரங்கில் இடம் பெறும்.

REGAL - JAFFNA
Time: 4-45, 7-00 p. m.
George Makarias
Anne Francis
in
THE SATAN BUG

வரி விளம்பரம்

கல்வி

வகுப்புகள்

ஆசிரிய கலாசாலை பிரவேசப் பரீட்சைக்கு விவேக மீட்டல் பாடங்கள் ஆங்கில பாஷை, தூயகணிதம், பொளதீகவியல், இரசாயனவியல், உயிரியல், வர்த்தகம், மனையியல், கணக்கியல் ஒவ்வொன்றும் ரூபா 6-00, பொதுவிவேகம் ரூபா 5-00, ஆங்கில வியாசங்கள் ரூபா 4-00, தபால் செலவு — 50 சதம். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 1814

வகுப்புகள்

சாதாரண உயர்தர வகுப்புகள் பயிற்சிபெற்ற ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றன. விஞ்ஞானம். வர்த்தகம், கலை, சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. விபரங்களுக்கு ச. ஞானப்பிரகாசம், நிர்வாகி, வர்த்தக கல்விநிலையம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 1826

வகுப்புகள்

தபால் அதிபர் தந்தியாளர் பயிற்சி, தாதிகள் பயிற்சி போன்ற அரசாங்க பொதுப் பரீட்சைகளுக்கு வகுப்புகள் நடாத்தப்பெறுகின்றன. விண்ணப்பியுங்கள். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, [Jaffna Tutorial College), கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர் / நெல்லியடி, கரவெட்டி. 1823

வகுப்புகள்

ஜி. சி. ஈ. கலை/விஞ்ஞானம் / வர்த்தகம் பயிற்றப்பட்ட பட்டதாரிகள் மூலம் வகுப்புகள் நடாத்தப்படும். எங்கள் மாணவர்கள் நூற்றுக்குநூறு வீதம் சித்தி அடைகின்றனர். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி 107, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்பிரதானவீதி, முள்ளியவளை. 1816

க. பொ. த. [சாதாரணதர] வகுப்புக்குரிய 'தமிழிலக்கிய விளக்கம்' யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியரும் பிரபல எழுத்தாளருமான 'சொக்கன்' எழுதியது. மிக விரிவான விளக்கக் குறிப்புக்களையும் மாணவர்க்கு மிக உதவியான பல விபரங்களையும் கொண்டது. விலை ரூபா 4-00. பிரதம விற்பனையாளர்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 1817

இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

ஞாயிறு 21 - 5 - 67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 எங்கள் அதிதி.

இரவு 6-15 குரல்வகை, 6-30 நேயர் கடிதங்கள், 6-45 கத்தோலிக்க ஆராதனை, 7-15 நிலைய ஒலிப்பதிவுகள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம்—சங்கமித்திரை - டி. சவுந்தரராஜா, 10-00 மாதர் கேட்டவை.

WANTED

Incubator operators. Minimum experience Ten years. Salary Rs. 250/- inclusive of all allowances. Manager, Aruna Agencies, Alaveddy. 1819

தேவை

மனேஜர்:

ஆங்கிலம், கணக்குடன் எஸ். எஸ். சி. சித்தி பெற்ற ஒரு உதவி பாற்பண்ண மனேஜர் தேவை. வயது 25 க்கும் 30 க்குமிடையில். யாழ்ப்பாணத்தில் 3 மாத பயிற்சி. பயிற்சி காலத்தில் சம்பளம் இல்லை. வேலை பார்க்குமிடம் பொலன்னறுவை. ஆரம்ப சம்பளம் மாதம் ரூபாய் 150/. பிணைப்பணம் ரூபாய் 1000/. விண்ணப்பத்தோடும் தராதரப் பத்திரங்களின் மூலப்பிரதிகளோடும் வருகிற 23-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நேரில் சந்திக்கவும் வட இலங்கைக் கூட்டுறவு பாற்பொருள் உற்பத்தியாளர் பாவிப்பாளர் சங்கம் இல. 67/1 அரசடி வீதி யாழ்ப்பாணம். 1825

வகுப்புகள்

ஐக்கிய கலாசாலை தனது கிளை ஸ்தாபனங்களை கிளிநொச்சி, மன்னார், வவனியா, மட்டக்களப்பு பகுதிகளில் திறக்கவிருக்கிறதென்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றது. ஜி. ஏ. கியூ, ஜி. சி. ஈ. [சாதாரண, உயர்தர] சிங்களம், ஆங்கிலம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கியல், தையல் கலை, சங்கீதவகுப்புகள் நடாத்தப்படும். மாணவர்கள், பெற்றோர்கள் உடனடியாகத் தொடர்புகொள்ளவும். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 1815

வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணாந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

பவரின்
காய்கறிப் போரை

ஏ. பவர்
அன்கம்பனி லிமிடெட்
கொழும்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மூளாய் கொலை வழக்கு; இன்று தீர்ப்பு வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

15 தினங்களாக வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நடந்த மூளாய் கொலை வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப் படும்.

நீதியரசர் வி. தென்னக் கோன் முன்னிலையில் நேற்று காலை இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது, அட்வகேட் இரகுபதி தொகுப்புரை நிகழ்த்தினர். சுமார் 4 மணி நேரம் தொகுப்புரை நிகழ்த்திய அட்வகேட் இரகுபதி இன்று காலையும் தொடர்ந்து தொகுப்புரை நிகழ்த்துவார்.

அதன் பின்னர், எதிரிகளுக்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் எஸ். தில்லையர் தொகுப்புரை நிகழ்த்துவார். அதன் பின் முடிக்குரிய வழக்கறிஞர் திரு பண்டாரநாயக்கா தொகுப்புரை நிகழ்த்துவார். கடைசியாக நீதியரசரின் உரை முடிவடைந்தும், தீர்ப்பு வழங்கப்படும்.

இன்று காலை முதல் நண்பகல் வரை தொகுப்புரைகள் முடியாவிட்டால், மீண்டும் பிற்பகல் தொகுப்புரை தொடர்து நடைபெற்று அதன் பின் தீர்ப்பு வழங்கப்படும்.

ஆண்டுக்கு ஒருமுறை...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தரு
தெந்தென தெனு தெனதெனு தென்னு
தெனனு தெனு தெந்தனு தெந்தனனு

அடவிக் கரைதனில் விடுதிவிட வந்தாய்
அழகான மாட்டிடையர் கண்ணில் வெளிப்பட்டாய்
பட்சமுடன் எந்தனுக்குப் பசியதிக மென்றாய்
பாரப்பா என்தலையில் பேனதிக மென்றாய்
பிள்ளைகளும் அப்போ பிரியமுடன் தானே
பேரான தலையதனைப் பார்ப்போமே யென்று

அழகான தலையதனைப் பிளவாய் வகிர்ந்து
அம்மனே உன்புதுமை கண்டோமே தாயே
பாங்குடனே கண்கள் ஓராயிரமு முண்டு
பாங்குடனே உன்சிரசில் கண்டோமே தாயே
பத்தியாய்ப் பிள்ளைகளும் பக்குவம தாகப்
பால்புக்கை மீட்கப் பறந்திட்டாய் தாயே

இருந்த படவாள் இலைவிட் டெழும்ப
எல்லோரும் புதுமையென்று கோயிலுங்கட்டி
அழகான மடைகளும் பொங்கலும் செய்து
அம்மனே உன்புதுமை கண்டோமே தாயே
வண்ணம் பொருந்திய கண்ணகைத் தாயே
வஞ்சியே யுந்தன் அடைக்கல மம்மா

வற்றாப்பளை என்னும் பெயர் பத்தாம்பளை என்னும் பெயரின் சிதைவு என்பர்- கண்ணகியின் கோயில்கள் இலங்கையில் பத்து உண்டென்றும் முள்ளியவளையில் எழுப்பியது பத்தாவது என்றும் கொண்டு, இதனைக் காரண இடுகுறிப் பெயர் ஆக்கினர். முல்லைத்தீவில் பெயர்கள் சில தண்ணீர்காரணமாக எழுந்தவை. உதாரணமாக நல்லதண்ணீரூற்று, வற்றாமடு, பின்னது கொக்கிளாயில் உள்ளது வற்றாப்பளையும் அவ்வாறு வந்த பெயராகாதா?

[இப் பாடலை எழுதி உதவிய ஓட்டுசுட்டான் அன்பர் திரு. கா. உ. மாப்பாணர் அவர்களுக்கும் கோயில் விவரங்களைத் தந்துதவிய முள்ளியவளை ஆசிரியை திருமதி செல்லம்மா முத்தையா அம்மையார் அவர்களுக்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.]

கண்ணகி மகிமை

"அடவிக் கரைதனில் விடுதி" ஆகக் கண்ணகியம்மன்கோவில்கள் இலங்கையில் அமைந்திருத்தல் ஒரு விசேஷம். கடற்கரை காடு இந்தச் சூழ்நிலையிலேதான் கண்ணகிக்குக் கோவில்கள் உண்டு' அத்தெய்வம் இந்தியாவினிருந்து வந்தவகையும் அச்சூழ்நிலைக்கு ஏற்றதாகின்றது.

ஊர்காவற்றுறையில் உள்ள கண்ணகியின் வரலாறு இது. வலைஞன் ஒருவன் மீன் பிடித்துக் கொண்டு கட்டற்கரை நீளம் வருங்கால், கடலில் கரையை நோக்கி பெட்டியொன்று மிதந்து வந்தது கண்டான். உடனே நீரில் இறங்கி அதை எடுத்து வந்து, கரையில் வைத்து விட்டு மீண்டும் மீன் பிடித்தான். அதனை வீட்டிற்குக்கொண்டு போய்த் திறக்க வேண்டும் என்பது அவன் ஆசை. பெட்டியைத் தூக்கினான். அசையவில்லை. அயற் கிராமத்திற்குப் போய் ஆள் ஆயுதந்துணையாக வந்து திறந்தான். அதனுள் சிலை ஒன்றிருந்தது. அத்தனை பேரும் அதனை எடுத்து உயர்த்த முடியவில்லை. அந்த இடத்திலேயே பிரதிட்டை பண்ணி விட்டார்கள். அந்தக் கோவிலில் இன்றும் வைகாசி மாதத்தில் பெரும் பொங்கல் நிகழ்கின்றது. அப்போது கோவிலைச் சூழ்ந்த காடு கடலெங்கும் ஒரே வெளிச்சமும் புகையுமாயிருக்கும்.

[இவ் வரலாற்றினை எமக்குச் சொல்லியவர் தலையாளி, திரு. வ. கந்தையா அவர்கள் ஆவார்.]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு மேமாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கலைவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். பிரதேசகலா மன்றத்தின் ஆதரவில் வரும் கலாமன்றம் அதன் 2வது விழாவை, இடைக்குறிச்சி சேவலபிட்டி கந்தசுவாமி கோயில்முன்றலில் இன்று தொடக்கம் 3 தினங்கள் கொண்டாடுகிறது.

பி.ப. 6-30 நாதஸ்வரக் கச்சேரி-கைதடி கே. பழனி மலை கோஷ்டியினர், 7-30 நடனம்-கவகச்சேரி அரசினர் மகளிர் கய்லூரி மாணவிகள், 7-45 பேச்சு-பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை, 8-30 நடனம்- மட்டுவில் கமலாசினி வித்தியாசாலை மாணவிகள், 8-45 சங்கீதக் கச்சேரி- திரு. எஸ். பரம்தில்லைராஜா 10-00 நாடகம்.

இலங்கை டாக்டர் புரூனியில் புதிய பதவி

புரூனி, சனி

முன்னைநாள் யாழ்ப்பாண எம். பி. யும் முன்னாள் யாழ். மேயருமான திரு. அல்பிரட் துரையப்பாவின் மனைவியான திருமதி துரையப்பா புரூனியில் கல்லூரி சுகாதார சேவை வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதிமன்றத்தில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யில் கூறியதாவது: ஒரு பிராமணப்பெண்தான் கற்பாஸ்திரி என்று காட்டுவதற்கு, தன்மகனுக்குப்பால்கொடுக்கும்போது முகத்தை மறுபக்கம் திருப்பி விடுவாள். அப்படிப்பட்ட பிராமணத்தியின் வேஷத்தைக்கலைக்க, அருகிலிருந்த குயவன் ஒருவன்கோறையாக ஒரு ஆணை செய்தான். அதற்குள் பிராமணனை ஒளித்திருந்து வீட்டில் நடப்பதை இருதுவாரங்களால் பார்க்க ஏற்பாடு செய்தான். கற்புள்ளமங்கையென நடித்துவந்த பிராமணப்பெண்ணின் தவறான நடத்தைகளைகணவன்நேரில் அறிந்துகொண்டான்.

கபட சந்நியாசி ஒருவர் தனது சொத்துக்களையெல்லாம் பணமாக்கி, தான் கொண்டுதிரியும் கைப்பிரம்பிற்குள் ஒழித்து வைத்திருந்தார். இதனை அபகரிக்க விரும்பிய ஒருவன் தன்னை சிஷ்யனாக ஏற்றுக்கொள்ளும்படி கூறினான். ஒருநாள்வழியில் செல்லும்போது, பிராமணன் வீட்டு வைக்கல்தூசி பறந்துவந்து சிஷ்யன் தலையில் விழுந்தது. உடனே அவன் மிகவும் பயபக்தியுடன் அந்த வைக்கல் தூசியைப் பிராமணன் வீட்டில் சொருகினான். இதனால் சிஷ்யன் மீது சந்நியாசிக்கு நம்பிக்கை பிறந்தது. தனது கைப்பிரம்பை சிஷ்யனிடம் கொடுத்துவிட்டு சந்நியாசி குளிப்பதற்குகுளத்தில்இறங்கியதும், சிஷ்யன்பிரம்புடன் ஓட்டமெடுத்தான்.

ஒருசமயம் ஆடுஒன்று திருட்டுப்போனது சனங்கள் திருடனைத் தேடித்திரிந்தார்கள். கடைசியில் ஒருபெரியவரிடம் ஆலோசனை கேட்டார்கள். அப்பெரியார் மேலேஉள்ள இருசம்பவங்களையும் உத்தேசித்துப் பார்த்தால்; ஆடுதிருட்டுப் போனவீட்டருகேயுள்ள சமணன் தான் திருடியிருக்க வேண்டுமென்று கூறினார்.

இதேபோல்தான், இவ்வழக்கில் சாட்சியமளித்த ஜயன் கந்தையா, துவக்கை கோர்ட்டில் காட்டக்கூடப் பயந்தார். துவக்கிலால் கொக்குகுருவி சுடுவதென்று தெரியாதெனக் கூறினார். விலைகொடுத்து வாங்கக் கூடிய பொருளென தனக்கு தெரியாதென்றார். பெறுமதியான பொருளென்றும் தனக்கு தெரியாதென்றார். இப்படியெல்லாம் புருடாவிட்டபடியால் ஒருவேளை துவக்கு அவருடையதாயிருக்கலாம்! யாருடையது என்பதுபற்றி எங்களுக்கு அக்கறையில்லை.

பிரதமரும் . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. வேர்ணன் அபயசேகராவும், செயலாளராக திரு. டபிள்யு. செல்வரத்தினமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

இப்பொருட்காட்சி அமைப்பு ஒழுங்குகள்பற்றியும், காட்சி அமைப்புபற்றியும் ஆராய மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் நேற்று முன்தினம் ஒரு மகாநாட்டைக் கூட்டியிருந்தார். இம்மகாநாட்டுக்கு விவசாயம், கமத்தொழில், கைத்தொழில், கல்வி, மீன்பிடி, நீர்ப்பாசனம், சுகாதாரம், தபால் தந்திப்பகுதி, தேசிய சேமிப்பு, பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள், விற்பனைப் பகுதி, பொலிஸ் ஆகிய இலாகாக்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தார்கள். இப்பொருட்காட்சியை முன்னிட்டு விசேஷ சிறப்புமலர்ஒன்றும் வெளியிடப்படவிருக்கின்றது.

'அற்ப விஷயங்களுக்காக உயிரை மாய்க்கலாகாது'

இளைஞனின் மரணம குறித்து மரணவிசாரணை அதிகாரி வருத்தம

காங்கேசன்துறை, சனி

"அம்மா, நான்இல்லாமல் நீ என்ன செய்யப் போகிறாய்? கொள்ளிக்கடனுக்காக என்னைக் காத்திருந்தாய் நான் உயிருடன் இருப்பதாலல் ஊரார் என்னைப் போற்றத்தக்கதாக இருக்க வேண்டும். அல்லதுவாழ்ந்து பயனில்லை. எனது சடலத்தை பிரபல பாதையால் எடுத்துச் செல்லாமல் கண்ணி தோட்ட ஒழுங்கையால் கொண்டு சென்று தாவடிச் சுடலையில் தகனம் செய்யவும்" என்று கடிதம் எழுதிவைத்து விட்டுத் தற்கொலைசெய்து கொண்டார். 18 வயது வாலிபர் ஒருவர். இரண்டாவது தடவையாகவும் பரீட்சையில் தோற்றதால் தாம் நச்சுத்திராவகம் அருந்தித்தற்கொலை செய்வதாகவும் அக்கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

சுதுமலை வடக்கைச் சேர்ந்த கந்தையா குமாரசாமி என்ற இளைஞனின் மரணம் சம்பந்தமான விசாரணையில் இறந்தவரின் மேலங்கியிலுள்ள பையிலிருந்து பொலிஸ் சார்ஜன்ட் எக்க நாயகாவினால் கண்டெடுக்கப்பட்டகடிதம் மரண விசாரணை அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. அ. குமரகுரு விசாரணை நடத்தினர்.

இறந்தவரின் தந்தை தம்பிப்பிள்ளை கந்தையா சாட்சியமளித்தார்

தோல்வியே வெற்றிக்கு உறுதுணை என்பதை இறந்தவர் உணரத்தவறிவிட்டதாகவும், அற்ப விஷயத்துக்காக அருமையான உயிரை மாய்த்துக் கொண்டாரென்றும் கூறி தமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்ட மரண விசாரணை அதிகாரி, தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

இரதோற்சவம்

வேலணை, ஞாயிறு

வேலணைமேற்கு பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் கோயில் இரதோற்சவம் நாளைநடைபெற விருக்கிறது. வெளியிடங்களிலிருந்து வரும் அடியார்களுக்ககான விசேஷ பஸ்போக்குவரத்து சேவை ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

கதாப்பிரசங்கம்

நாவற்குளி, ஞாயிறு

நாவற்குளி சித்திவிநாயகர் இந்துவாலிபர்சங்க ஆதரவில் சங்கத்தலைவர் திரு. செ. வேலுப்பிள்ளை தலைமையில் நாவற்குளி சித்திவிநாயகர் ஆலயமண்டபத்தில் செல்வி ஜெகதாசாம்பசிவக்குருக்கள் 'சிவபூசையில் திளைத்த செல்வர்' எனும் பொருள்பற்றி இன்று மாலை 6 மணிக்கு கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

கொட்டைக்காடு சம்பவம்

அரசாங்க அதிபர் ஆராய்ந்தார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வட்டுக்கோட்டைக் கொட்டைக்காட்டில் அண்மையில் நடைபெற்ற கலவரம் சம்பந்தமாக வடமாகாண அரசாங்க அதிபர் நேற்றுக் காலை தொடர்ந்து சமரச மகாநாட்டைக் கூட்டினர். அவ்வூர் வாசிகளுக்கும் அங்கு வாழும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குமிடையில் நடைபெற்ற இக்கலவரம் சம்பந்தமாக இங்கு ஆராயப்பட்டது. இம்மகாநாட்டிற்கு பொதுஜனத் தொடர்பு அதிகாரி திரு. செல்வரத்தினம், காங்கேசன்துறைப் பகுதி உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. லியனகே, சங்கானைப் பகுதி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. டயஸ் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

இங்கு ஏற்கனவே பொலிசார் ரோந்து சுற்றி தொடர்ந்து கலவரம் ஏற்படாது தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. கலவரம் சம்பந்தமாக ஏற்கனவே வெளியேறிய 7 குடும்பங்களையும் அங்கு மீண்டும் குடியேற்றுவது சம்பந்தமாக ஆராயப்பட்டபோது அங்கு தொடர்ந்து பொலிசார் ரோந்து சுற்றி மேலும் கலவரம் நிகழாவண்ணம் பாதுகாப்பு அளிக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது.

(த. நி.)

திறப்புக்கோர்வை

யாழ்ப்பாணம், ஞாயிறு

சிவன்கோவில் வீதிக்கருகில் திறப்புக்கோர்வை ஒன்றைக் கண்டெடுத்த திருவாளர்கள் சி. சுந்தரேசன், இ. குலசிங்கம் ஆகியோர் அதை 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளனர். உரியவர்கள் காரியாலய நேரத்தில் 'ஈழநாடு' காரியாலயத்தில் அத்தாட்சிசாட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

காணவில்லை

திறப்பு

13-5-67 காலை 8-30-ல் யாழ். ஆஸ்பத்திரி வீதி சுபாஸ்கபேக்கு முன் ஒரு 1966-ம் ஆண்டுக்குரிய டயரி காரில் இருந்து தவறியது. எடுத்தவர் கார் 8092 தயவுசெய்து இதைக. சாந்தலிங்கம், ஆஸ்பத்திரிவீதி, 101- மோர்க்கடையில் கொடுத்து சன்மானம் பெற்றுக் கொள்ளவும். 1831

மரணஅறிவித்தல்

கா. சுப்பையா

உரும்பராயைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் திரு. கா. சுப்பையா நேற்றுக் காலமானார். இவர்நேசம்மாவின் கணவரும் மயில்வாகனம் [ஆசிரியர், சிங்கப்பூர்], ராசலட்சுமி, பரமசிவம் [ஆசிரியர், மலேசியா] பரமேஸ்வரி; சிவநேசன் [ஈழநாடு], காசிநாதன் ஆகியோரின் தந்தையாரும், ஆர். இரத்தினவேலின் [சௌக்கியப்பகுதி காரியாலயம், யாழ்ப்பாணம்] மாமனாருமாவார். இவரது ஈமக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு இளங்காடு மயானத்தில் நடைபெறும். 1830

மரணஅறிவித்தல்

ஆனை இறவு, உப்பளம் பரிசோதகரும், லீலாவதியின் கணவரும், இராஜேஸ்வரியின் தந்தையுமான திரு. ஞானராசா காலமானார். அன்னாரின் பிரேதசேமஆராதனை இன்று [21-5-67] பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரியில் நடைபெறும். 2400

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org